தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலைக்கழகத்தில் வேளாண் விஞ்ஞானிகளுக்கான கோடைக்காலப் பயிற்சி நடைபெறும்

மானாவாரி ளோண்மை குறிப்பாக காலநிலை மாற்றத்திற்கேற்ற வேளர்ணமையை மேம்படுத்துவதற்குண்டான பல்முனை விவரிவாக்க முறைகள் பற்றிய விஞ்ஞானிகளுக்கான கோடைக்காலப் பயிற்சி வருகிற ஆகஸ்டு 5 முதல் 25, 2015 வரை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மற்றும் சமூகவியல் துறையில் 21 நாட்களுக்கு நடைபெறும்.

இந்திய வேளாண்மையில் மானாவாரி விவசாயமானது ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக, மொத்த சாகுபடி நிலப்பரப்பில் சுமார் 50 சதவிகித நிலப்பபரப்பளவு மானாவாரி விவசாயமானது மட்டுமல்லாமல், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மானாவாரி விவசாயத்தின் பங்கு கணிசமான அளவாகும். மானாவாரி வேளாண்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கேற்ப வேளாண்மை பற்றிய ஆராய்ச்சியில் தமிழ்நாடு வேளர்ணமைப்ப பல்கலைக்கழகமானது, தேசிய அளவில முன்ணணியில் உள்ளது. குறிப்பாக, காலநிலை மாற்றங்களை சமாளிக்கும் வகையில் இங்கு புதிய விரிவாக்க முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கோடைக் கால பயிற்சியில் பலத்தரப்பட்ட புதிய விரிவாக்க முறைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். அவை பின்வருமாறு:

- மண் வள மேம்பாடு, மழை நீர் சேகரிப்பு, பொது உடைமை வள பராமரிப்பு, துல்லிய பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், பட்டுப்புழு வளர்ப்பு, மருத்துவப் பயிர்கள் சாகுபடி மற்றும் பண்ணை இயந்திரமயமாக்குதல்

ஆகியவற்றிற்கான விரிவாக்க முறைகள். மேலும், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் தீவனப் பயிர்கள் ஆகியவற்றிற்கான விரிவாக்க முறைகள்.

- நீர்பிடிப்பு மேலாண்மை, சந்தை சார்ந்த விரிவாக்கம், தொழில்முனைவோர் மேம்பாடு, இளைஞர்களை வேளாண்மைக்கு ஈர்ப்பது, விவசாயிகள் மூலம் விரிவாக்கப் பணிகளை செயல்படுத்துவது, பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து செயல்படுவது, மற்றும் விரிவாக்கத்தில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பங்கு, போன்ற விரிவாக்க முறைகள்.
- அரசு வேளாண் துறை மற்றும் சகோதர துறைகளின் விரிவாக்கப் பணிகள், வங்கிகள், அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் உற்பத்தி குழுக்கள் ஆகியவற்றின் விரிவாக்கப் பணிகள்.
- பயிர் காப்பீடு, சந்தை தகவல் மற்றும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி சார்ந்த விரிவாக்கப் பணிகள்.

இக்கோடைக்கால பியற்சியில் நாட்டின் 11 மாநிலங்களைச் சேர்ந்த (தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா பிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், ஜம்மு காஷ்மீர், குஜராத், பீகார், அரியானா மற்றும் உத்தர பிரதேசம்) சுமார் 25 வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

இப்பயிற்சியின் இயக்குநராக இப்பல்கலையைச் சேர்ந்த ஆடுதுறையில் அமைந்துள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் விரிவாக்கப் பேராசிரியர் முனைவர். ரவி குமார் தியோடர் அவர்கள் செயல்படுவார். மேலும், இப்பயிற்சியின் துணை இயக்குநராக இப்பல்கலையில் உள்ள வேளாண் விரிவாக்கம் மற்றும் சமூகவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் மு. அசோகன் அவர்கள் பணிபுரிவார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்